# எங்களைதிருப்பிஅனுப்பாதீர்; அகதிகள்கோரிக்கை

(சென்னை)

இலங்கை இராணுவத்திடம் தம்மை பலியாடுகளாக அனுப்ப இந்திய, இலங்கை பின் உதவியுடன் முயன்றுவருவ தாக தமிழகத்திலுள்ள பல ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கை கொடுக்கும் உதவித் தொகையும், பாதுகாப்பு உத்தரவாதத்திலும் தமக்க ளுக்கு சிறிதளவேனும் நம் (4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 17 இதழ் 352

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 31—01—1992


## கிழக்கில் தேர்தல்; அரசு ஆலோசனை

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடாத்த அரசு முயற்சித்து வருவதாக தெரியவருகிறது.

முதல் பரீட்சார்த்தமாக இத்தேர்தல் கிழக்கில் சிங்களவர், முஸ்லிம்கள் பெரும்பான்மையினர் வாழும் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற வுள்ளது.

இதனைப் பொறுத்து ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் இத் தேர்தலை நடாத்த அரசு முன்வருமெனவும் தெரிவிக்கப் படுகிறது. (இ)

# கல்முனை, காத்தான்குடியில் குண்டுவெடிப்பு; 9 பேர் பலி!

## - 20 பேர் காயம்; பொலிஸ்நிலையம் சேதம் -

[மட்டக்களப்பு]

**மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை ஒரே நேரத்தில் கல்முனை பொலிஸ் நிலையத்திலும், காத்தான்குடிப் பகுதியிலும் இடம் பெற்ற இரு குண்டுவெடிப்பு சம்பவங்களில் இரு பொலிஸார் உட்பட ஒன்பது பேர் பலியாகினர். 20 பேர் காயமடைந்தனர். பொலிஸ் நிலையம் பலத்த சேதமடைந்தது.**

மேற்படி இரு சம்பவங்களும் நேற்றுக்காலை 10 மணியளவில் நடைபெற்றுள்ளது. கல்முனை பொலிஸ் நிலையத்தில் வெடித்த பயங்கரக் குண்டுவெடிப்பில் 6 பேர் பலியானதாகவும், இதில் இருவர் பொலிஸார் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், பொலிஸ்நிலையம் பெரும் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேநேரம் காத்தான்குடிப் பகுதியில் சைக்கிள் ஒன்றில் (4ம் பக்கம் பார்க்க)

## பொதுத் தீர்வை தெரிவுக்குழு எடுக்கும்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழு பொதுத் தீர்வொன்றை முடிவு செய்ததன் பின்னர் அரசாங்கத்திற்கு இத்தீர்வு குறித்து சிபார்சுகளைத் தெரிவிக்குமென்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டா யோசனை தெரிவுக்குழு பரிசிலனையில்

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுக்கு அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகள் நாடாளுமன்ற தெரிவுக்குழு வின் பரிசீலனையில் இருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது. திரு தொண்டமானின் யோசனைக்கு தெரிவுக்குழு சாதகமான பதிலை அளித் தால் மாத்திரமே திட்- (4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் மேற்கொள்ளும் படுகொலைகள் தொடருமா?

(லண்டன்)

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற படுகொலைச் சம் வம் போன்று மேலும்பல படு கொலைகள் தொடருமா என்ற தொரு அச்சம் வடக்கு-கிழக் கில் நிலவுவதாக பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இது குறித்து பி.பி.ஸி. மேலும் தெரிவிக்கையில்; கொக்கட்டிச்சோலை படு (4-ம் பக்கம் பார்க்க)

## வள்ளங்களில் அகதிகளை அனுப்ப முயற்சி

[கொழும்பு]

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இராமேஸ் வரத்திலிருந்து மீன்பிடி வள் ளங்களில் இலங்கைக்கு அனுப் பிவைப்பது பற்றி தமிழ்நாட்டு அதிகாரிகள் தற்போது பரி சீலித்து வருகின்றனர்.

தற்போது அகதிகளை திருப்பி (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி எதிர்க்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் நிரந்தரமாக இணைக்கப்படு வதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வன்மையாக எதிர்க்கு மென கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து அவ்வட்டா ரங்கள் மேலும் தெரிவிக்கை யில், இந்நாடு துண்டாடப் படுவதையோ அல்லது வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதையோ அனு மதியோம் என்றும் குறிப் பிட்டுள்ளன.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் பதவியை ராஜினாமா செய்யவேண்டு மென கோரும் பிரேரணை ஒன்றை இரத்தினபுரி பிர தேச சபையில் சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ளது. (இ)

## கொக்கட்டிச்சோலைபடுகொலை அரச படையினரே காரணம்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற பொதுமக்களின் மரணத்துக்கு ஆத்திர மடைந்த படையினர்தான் காரணமாயிருந்தனர். இரு பொதுமக்கள் இறந்ததற்கு எந்தவிதமான இராணுவ நட வடிக்கையும் காரணமல்ல.

இவ்வாறு கொக்கட்டிச் சோலை சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதி பதியால் நியமிக்கப்பட்டகுழு வெளியிட்டிருக்கும் அதன் இடைக்கால அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டி ருக்கிறது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இரண்டு படையினர் கொக் கட்டிச்சோலை சம்பவத்தில் மரணமடைந்ததற்கும் மற் றொரு சிப்பாய் படுகாயம டைந்ததற்கும் காரணமான (4-ம் பக்கம் பார்க்க)

## ஐந்து படையினர் தடுப்புக் காவலில்

[கொழும்பு]

கொக்கட்டிச்சோலைபடுகொ லையில் சம்பந்தப்பட்ட இரா ணுவ உயர் அதிகாரி ஒருவரும் நாலு சிப்பாய்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

கொக்கட்டிச்சோலை விசா ரணைக் குழுவின் இறுதி அறிக்கை கிடைத்தபின்னர் (4-ம் பக்கம் பார்க்க)

## நிதி உதவி பெற இலங்கை சூழ்ச்சி

(கொழும்பு)

இராணுவத்தைக் குற்ற வாளியென நிரூபிக்கும் கொக் கட்டிச்சோலை படுகொலை அறி க்கை விசாரணைக்கமிஷனும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்த இலங்கை அரசு எடுத்த முயற்சியெனக் குற்றம் சாட் டப்பட்டுள்ளது.

கடந்த 2 வருடங்களில் அரச படையால் 17 படு கொலைச் சம்பவங்கள் மக்கள் மீது நடத்தப்பட்டது; இச் சம்பவங்கள் குறித்து அரசு ஏன் இதுவரை விசாரணை நடாத்தவில்லை. (4-ம் பக்கம் பார்க்க)

### 24 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)

சினன்குடா குண்டு வெடிப் பில் 24 விமானப்படை வீரர் கள் பலியானதாக, கேர்ணல் முனசிங்கா நேற்று கொழும் பில் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார். (4-ம் பக்கம் பார்க்க)

## வேலணை பிரதேச காரியாலயம்

(கொக்குவில்)

இராணுவ நடவடிக்கையால் குடிபெயர்ந்து திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் தஞ்சமடைந்த வேலணைப்பகுதி மக்கள் நன்மை கருதி வேலணை பிரதேச சபைக் காரியாலயம் கொக்குவில் பிரதேச சபைக் காரியாலயத்தில் ஒருபகுதியில் இயங்கி வருகிறது.

## தலைவராக மீண்டும் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகாசபைக் கூட்டம் சோ. தெண்டபாணி தேசிகர் தலைமையில் நடைபெற்றது. திரு. வ. இ. ந. சிகாமணி மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## 'அமிர்' கொலை வழக்கு வைத்தியதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் அ. அமிர்தலிங்கம், மற்றும் யோகேஸ்வரன் கொலை வழக்கில் சட்ட வைத்திய அதிகாரிகள் நேற்று நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர். [கே]

## வவுனியாவில் செங்கல் உற்பத்தி

(கொழும்பு)

வவுனியாவில் செங்கல் உற்பத்தி செய்வதற்கான இயந்திரம் கிடைக்கவுள்ளது.

செங்கல் உற்பத்தி செய்வதற்கான 3 இயந்திரங்கள் இத்தாலியிலிருந்து தருவிக்கப்பட்டு, அவற்றில் ஒன்று வவுனியாவுக்கு வழங்கப்படும். (கே)

## சதுரங்க விளையாட்டுப்போட்டி நடத்த ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாண பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் சதுரங்க விளையாட்டு போட்டிகளை நடாத்த யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள உடற்கல்வி பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

15 வயது, 19 வயதுக்கு உட்பட்ட மாணவர்களின் இருபிரிவுகளிலும் வயது எல்லையற்ற ஆசிரியர் பிரிவிலும் இப்போட்டி நடைபெறும்.

முதலில் கோட்ட மட்டத்தில் நடாத்தப்படும் சதுரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

இப்போட்டி சர்வதேச சதுரங்க சம்மேளன விதிமுறைகளின்படி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பெப்ரவரி மாதம் பத்தாம் திகதிக்கு முன்பு யாழ்ப்பாண கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு உடற்கல்விக்கு பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. அருணகிரிராசா அறிவித்துள்ளார். (109)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பெப்ரவரி 2ம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிமண்டபத்தில் சமாசத்தலைவர் திரு. சோ. தியாகராசா தலைமையில் நடைபெறும். (154)

## சாரணர் ஆசிரியர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்க சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு I, கலைக்கூறு II சாரணர், குருளைச்சாரணர் பிரிவுகளுக்கானது பெப்ரவரி 8-ம் திகதி காலை 8 மணி முதல் 9-ம் திகதி மாலை 4 மணிவரை சுன்னாகம் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும்.

0 0 0

(பருத்தித்துறை)

வடமராட்சி சாரண ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சி எதிர்வரும் 1ம், 2ம் திகதிகளில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (52)

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து அயல் வெற்றிக்குழைத்து இதுவரை காலமும் பல்வேறு சம்பவங்களில் ஜனவரி மாதத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட வடமராட்சி ஈழ'மைச் சேர்ந்த வீரவேங்கை சுமன் வீரவேங்கை விஜேத் ஆகியோரை நினைவு கொள்ளும் மாபெரும் நினைவு விழா வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில் இன்று கடற்புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

°° °° °°

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான உணவுமுத்திரை பெற்று வழங்குவதில் ஏற்பட்டுள்ள நடைமுறைப்பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இன்று 31-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு யாழ். சாதனாபாடசாலை மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் யாழ். மாவட்ட சமூக சேவைப்பகுதி ஆணையாளரும் உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ளவிருப்பதால் யாழ், கல்விக்கோட்ட சகல பாடசாலை அதிபர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

0 0 0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் அமரர் வி. கே. ஆறுமுகம் ஞாபகார்த்த கிண்ண இறுதிச் சுற்றுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 31-ம் திகதி அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பதில் தலைவர் திரு. கே. வி. செல்வராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. (52)

## அபிராமி பட்டம் விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை அருள்மிகு ஸ்ரீ பிரப்பங்குளமகா மாரியம்மன் ஆலயத்தில் பெப்ரவரி மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை அபிராமிப்பட்ட விழா நடைபெறவுள்ளது.

நண்பகல் ஒருமணி தொடக்கம் மூன்று மணிவரை நாட்டில் அமைதி வேண்டி பஜனைப் பாடல்கள் இடம்பெறும். அதன் பின்பு விசேட அபிஷேகமும், வசந்த மண்டபப்பூசையும் இடம்பெறும். (ச)

## தொண்டமான் பெப்ரவரியில் நாடுதிரும்புவார்

(புதுடில்லி)

இந்தியாவில் தங்கியிருக்கும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் பெப்ரவரிமாத முற்பகுதியில் நாடு திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [கே]

## தீவக பகுதி தபால்கள்

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் அரியாலை சந்நிதர்மடம், கல்வியங்காடு, திருநெல்வேலி, கொக்குவில், கோப்பாய் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்து இருப்பதால் வேலணை உட்பட பல தீவகத் தபால்கள் விநியோகம் செய்யாமல் இருப்பதாக வேலணை தபால் அதிபர் திரு. மாணிக்கம் நமசிவாயம் தெரிவித்துள்ளார்.

தாங்கள் தங்கியிருக்கும் புதிய முகவரியை அறிவிக்குமாறும் அவர் தீவக மக்களை கேட்டுள்ளார். (59)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முறைசாரக் கல்வி - கல்வி உயர்வு நிலையத்தால் வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் "சமூக மேம்பாடு" பற்றிய கருத்தரங்கு பெப்ரவரி மாதம் 8ம், 9ம் திகதிகளில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சமூக மேம்பாட்டின் முக்கியத்துவம், சமூகப்பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகளை விடுவிக்கும் வழிவகைகள் என்பனபற்றி இக் கருத்தரங்கில் ஆராயப்படஇருக்கிறது.

இக்கருத்தரங்கு தினமும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறும். (152)

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

சமூகக் கல்வி ஆண்டு 9 தரம் மீட்டலுக்கான விடை. ஆக்கம்: க. சந்திரசேகரம். (ஏ-1906)

## ஜனசக்தி 3ம் கட்டம்

(கொழும்பு)

ஜனசக்தி திட்டத்தின் 3ஆம் கட்டம் வடக்கு கிழக்கு பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பெப்ரவரி 10ம் திகதி ஆரம்பமாகிறது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதியின்மை காரணமாக அவ்வேலைத் திட்டங்கள் தொடரமுடியாமல் இருப்பதாகவும், அமைதி நிலவும் பட்சத்தில் அங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

## செஞ்சிலுவை சங்க கிளை பணிமனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் செஞ்சிலுவை சங்க கிளைப் பணிமனையை மாவட்ட செஞ்சிலுவை சங்க தலைவர் திரு. எஸ். சிவராசலிங்கம் திறந்து வைத்தார். கிளிநொச்சி செஞ்சிலுவை சங்க கிளைத்தலைவர் திரு வை. குகராசா தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. (83)

## 659 அகதிகள் நாடு திரும்பினர்

(திருகோணமலை)

இந்தியாவிலிருந்து திரும்பும் இரண்டாவது தொகுதி தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் திருகோணமலையை வந்தடைந்தனர்.

இத்தொகுதியில் 659 பேர் வந்து சேர்ந்தனர்; முதல் வந்த 814 பேருடன் இவர்களும் உப்புவெளியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாமின் தங்க வைக்கப்படுவார்கள். [கே]

## ஊழியர் நலன்புரி சங்கம்

(வேலணை)

வேலணை பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் அனைவரும் ஒன்றிணைந்து நலன்புரிச் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர். (75)

## வருடாந்த கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் 20வது வருடாந்தக்கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பெப்ரவரி 2ம் திகதி நடைபெறும். (52)

## லூர்து அன்னை பெருவிழா

(ஊர்காவற்றுறை)

பருத்தித்துறை தும்பளை - யாழ். கோவில் வீதி அருள் ஆச்சிரமம் ஆகிய இடங்களில் உள்ள கோவில்களில் புனித - லூர்து அன்னை பெருவிழா பெப்ரவரி 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. [44]

## யாழ். பிராந்திய செயலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய செயலகம் அடுத்த மாதம் 10-ம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [வி]


## சாவகச்சேரி - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை ஆரம்பம்

சாவகச்சேரியிலிருந்து புறப்படும் நேரங்கள்
காலை 7.30, 9.30, 11.00

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பும் நேரங்கள்
காலை 11.00, பிற்பகல் 1.30, 3.30

மினிபஸ் உரிமையாளர்கள்
சாவகச்சேரி.

(ஏ 1904)

## COMPUTER CLASSES

in

★ BASIC
★ d Base III+ } பல்கலைக்கழக மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்

இவற்றுடன்

Management in Computer

தொழில் புரிவோருக்கான பயிற்சி நெறி

ஆரம்பம்: 1-2-1992

விபரங்களுக்கு:

North Ceylon Technical Institute,

14, St. Peters Lane Jaffna.

(ஏ-1909)


## 31ம் நாள் நினைவஞ்சலி



செல்வி தயாபரம் துயிதா
(துயில்)

விழிப்பு: 24 04-1983 துயில்வு: 01-01-1992

திதி: 31 01 1992

தொப்புள் இருக்கையிலே தொடரும் அருந்திருந்தால்
கணநேரக் கலக்கத்தில் கவலை மறந்திருப்போம்
தாலாட்டிச் சீராட்டி நல்லபெயர் நாம் சூட்டி
நாளோடு நாளாக நாம் போரிட்டுக் காவலுற்று
பாலோடு பழத்தோடு பக்குவமாய் வளர்த்துவர
வாலையின் ஓரத்தில் வந்துவிட்ட நேரத்திலே
காலத்தின் பிடியினுள் கரைந்து நீ போவதற்கோ
துயிலே!

குடும்பத்தினர்.

மாவடி ஆலய வீதி,
சங்கானை.

[கி-5920]

# தி.மு.க. ஆட்சியை கலைத்ததால் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீராகிவிட்டதா?

## கலைஞர் கருணாநிதி கேள்வி

(சென்னை)

''திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியைக் கலைத்தால், தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீராகிவிடும் என்று கூறி, ஆட்சியைக் கலைத்தார்கள். இன்று சட்டம், ஒழுங்கு சீராகிவிட்டதா?''

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் திரு. கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் இளைஞர்கள் திருடுகிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள், ஆட்களைக் கடத்துகிறார்கள் என்று, இன்று சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவருகின்றன; தி.மு.க. படுத்திய அதே நாளில் தான் உலக நாடுகள் அனைத்தும் திடுக்கிடக்கூடிய கொடிய சம்பவமாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஸ்ரீ பெரும்புதூரில் கொலைசெய்யப்பட்டார்.

தி.மு.க.வின் 2 வருடகால ஆட்சியில் எட்டுமுறை தமிழகம் வந்து பத்திரமாகத் திரும்பிய ராஜீவ் காந்தி, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்புதான் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட்டது என கவர்னர் தெரிவித்த நாளில்தான் கொலையுண்டார். அந்தக் கொலையைத் தொடர்ந்து சுமார் இருபது போராளிகளைப் பொலிஸார் துரத்திய போது சயனைட் அருந்தியும், பொலிஸாரால் சுடப்பட்டும் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் இறந்தார்கள். வேதாரண்யம் சண்முகம் இறந்தது இன்னமும் மர்மமாகவே உள்ளது.

எப்படி இது எனக்குத் தெரியவில்லை? சந்திரசேகரை பலிக்கடாவாக்கிய காங்கிரஸ் கட்சி, சில நாட்களுக்கெல்லாம் ராஜீவ் காந்தி வீட்டு வாசலை இரண்டு பொலிஸ்காரர்கள் வேவுபார்க்கிறார்கள் என்று சொல்லி சந்திரசேகரை பிரதமர் பதவியில் இருந்த அவரது ஆட்சிக்கு முடிவு கட்டியது.

அந்த நேரத்தில் சந்திரசேகர் ராஜீவ் காந்தி, ஜெயலலிதா இருவரின் வற்புறுத்தல்களால் தான் திரு. கருணாநிதியின் ஆட்சியைக் கலைத்தேன் என்று கூறினார்.

தமிழ்நாடு கவர்னர் பர்னாலாவை பிரதமர் சந்திரசேகர் அழைத்து தி.மு.க. அரசை கலைக்கக்கூடியவிதமாக பொய்யான அறிக்கை ஒன்றைத்தரும்

எமது ஆட்சி கலைக்கப்பட்ட பின்பு மதுராந்தகம் சிறையில் இருந்த நான்கு தடவைகள் வெளிவந்ததாக இதுவரை மொத்தம் ...

### ''ராஜீவின் வற்புறுத்தலினால் திமுக ஆட்சியை கலைத்ததாக சந்திரசேகர் கூறினார்''

20 போராளிகள் தப்பிச் சென்றிருக்கிறார்களே அது எப்படி? அவர்களைத் தப்பவிட யாரை வது மேலிடத்திலிருந்து வாய்மொழி உத்தரவு வழங்கினார்களா? அல்லது அதிகாரிகள் மட்டத்தில் அதுபோன்றவாய்மொழி உத்தரவு ஏதேனும் உண்டா? சிறையிலிருந்து ஒரு முறையல்ல நாலு ஐந்துமுறை ஒருவர் இருவர் அல்ல இருபது பேர் தப்பியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (வி)

## ''எங்கள் ஆட்சியின்போது 8 முறை ராஜீவ்காந்தி தமிழகம் வந்து பத்திரமாக திரும்பி சென்றார்''

ஆட்சியைக் கலைத்ததால் சட்டம், ஒழுங்குசீராகிவிட்டதா?

1991-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த திரு. சந்திரசேகர் தி.மு.க. அரசு இலங்கைத் தமிழ் போராளிகளை விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தவில்லை என்று குற்றம்சாட்டினர்.

தற்காலிகமாக எனது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள எனது தன்மையிலுள்ள ஆட்சியை திரு. சந்திரசேகர் கலைத்தார். இதை நான் அப்போதே படி வற்புறுத்தினர். அதற்கு கவர்னர் மறுப்புத் தெரிவித்த போதிலும், குடியரசுத் தலைவர் அதையும் பொருட்படுத்தாது தி.மு.க. ஆட்சியைக் கலைக்க கையெழுத்திட்டார்.

எமது ஆட்சியைக் கலைத்தால் தான் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சரிவரும் என்று கூறினார்கள். இன்று என்ன ஆயிற்று அவர்களின் கூற்று?

கவர்னர் பீஷ்மன் நாராயண் சிங் பத்திரிகை நிருபர்களிடம் அன்று பேசும்போது ஈழப் போராளிகளை அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளை விரட்டி விட்டோம். சட்டம், ஒழுங்கு அமைதியைத் திரும்பவும் கொண்டுவந்துவிட்டோம் என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறினார்.

அவர் அப்படிப் பிரகடனப் இவையெல்லாம் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பின்புதான் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது என்று கூறியிருக்கிறார்களே அதற்கு அடையாள ...

## 6 நாள் வேலை செய்யும் தபால்ஊழியருக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

வாரமொன்றில் 6 நாட்கள் வேலைசெய்யும் தபால் ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு, வாரமொன்றிற்கு ஆறு நாட்கள் வேலை செய்யும் சகல தரங்களைச் சேர்ந்த தபால் ஊழியர்களுக்கும் 6-வது நாள் வேலை செய்வதற்கான விசேட கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது.

இந்த விசேட கொடுப்பனவை கொடுப்பதற்கு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி முடிவுசெய்துள்ளார். (வே)

## இருட்டு

(கொக்குவில்)

... துவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் உள்ள பலசரக்கு கடையொன்றில் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (135)

## பாடசாலைகளில் தஞ்சமடைந்த அகதிகளுக்கு முகாம்கள் அமைக்க முடிவு

(உடுவில்)

நவாலி கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளில் இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள அகதிகளுக்கு முகாம்கள் அமைத்து அதில் குடியிருக்க வைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட உள்ளன.

பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளை முகாம்களில் தங்க வைப்பதற்கான ஒழுங்குகளை அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொள்வர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இவ்வகதிகள் தொடர்பான கலந்துரையாடல் அகதிகளை முகாம்களில் தங்கவைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அகதிகள் புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பிரிவு உதவி ஆணையாளர், பாடசாலைகள் நிர்வாக பொறுப்பாளர் திரு. அருண்மாஸ்டர், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீண்டகாலமாக பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளை தனியார் காணிகளில் அல்லது அரசகாணிகளில் முகாம்கள் அமைத்து மிகவிரைவில் குடியமர்த்துவதென தீர்மானிக்கப்பட்டது.

## செம்பியன்பற்று புனர்வாழ்வு நிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்புலவற்று புனர்வாழ்வு நிலைய 10வது ஆண்டு நிறைவு விழா நாளை பெப்ரவரி 1ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு இன்னர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரட்ணம் யோகி பங்கு பற்றுகிறார். (152)

## இராசி பலன்

31/1/1992

வெள்ளிக்கிழமை

தமிழுக்கு தை 17

துவாதசி மாலை 6-41 வரை. மூலம் மு: இ: 10-57 வரை. இராகுகாலம் பகல் 11-06 முதல் 12-36 வரை. சுபநேரம் காலை 6-36 முதல் 8-06 வரை. கரிநாள்.

மேடம்- நம்பிக்கை குறைவு, தொழில் முடக்கம், குடும்ப கவலை.

இடபம்- குதர்க்கம், அதிருப்தி, பயணங்களால் தொல்லை.

மிதுனம்- வெகுஜன மதிப்பு, குடும்ப நன்மை, பாராட்டு.

கடகம்- வெளிப்பழு, விதண்டாவாதம், குடும்பமகிழ்ச்சி.

சிம்மம்- மனக்குமுறல், விரயம், அகாலபோஜனம்.

கன்னி- தொழில் பிணக்கு, வெளியார் கோபம், செலவு.

துலாம்- புதிய முயற்சி, பணவரவு, காரியசித்தி.

விருச்சிகம்- வைத்தியச் செலவு, தந்திரம், யோசனை.

தனுசு- நம்பிக்கை, மனமகிழ்ச்சி, புத்திரர் பெருமை.

மகரம்- உடல்நலக் குறைவு, மனைவியால் துன்பம், வெறுப்பு.

கும்பம்- காரிய அனுகூலம், வசதிவாய்ப்பு, நண்பர் வருகை.

மீனம்- ஆராய்ச்சி, மாதர உதவி, தெய்வீகச் செலவு.

-ஜோஸ்யர்

## அரபுநாடுகள்வல்லரசாவதை தடுக்க அமெரிக்கா முயற்சி

(வாஷிங்டன்)

அரபு நாடுகள் வருங்காலத்தில் அணுவாயுத வல்லரசுகளாக மாறிவிடக்கூடாது என்ற நோக்கத்தில் 2 ஆயிரம் சோவியத் யூனியன் விஞ்ஞானிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க அமெரிக்கா தற்போது முன்வந்துள்ளது.

முன்னாள் சோவியத் யூனியனின் அணுவாயுத விஞ்ஞானிகளுக்கு விசாவும், சாதனும் பெருமளவில் ஊதியம் வழங்கி வேலைக்கு அமர்த்த வதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கும்போதே அமெரிக்கா மேற்படி விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

ஆனால் சோவியத் யூனியனின் முன்னாள் அணுவாயுத விஞ்ஞானிகள், அரபு நாடுகளுக்கா அல்லது அமெரிக்காவுக்கா வேலைக்குச் செல்லப்போகின்றனர் என்பது பற்றி இன்னும் ஏதும் தெரியவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மூன்று மாதத்திற்குள் வடபகுதி உப்பளங்களை இயங்கச் செய்ய முயற்சி

(கொழும்பு)

வடபகுதியில் உள்ள உப்பளங்கள் அனைத்தையும் இன்னும் மூன்று மாத காலத்துக்குள் மீண்டும் இயக்குவதற்கான முன் ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ள இருக்கின்றோம்.

இவ்வாறு லங்கா உப்புக் கம்பெனியின் பிரதம அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளார்கள்.

வடபகுதியில் உள்ள மேற்படி கம்பெனியில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் 1991-ம் ஆண்டுக்குரிய முழுக் கொடுப்பனவுகளையும் வடபகுதியிலிருந்து சென்ற அதிகாரி ஒருவரிடம் கையளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

1992-ம் ஆண்டுக்கான கொடுப்பனவும் இனி உடன் களுக்கு மாதாந்தம் வழங்குவோம். ஆனால் இன்னும் மூன்று மாதங்களுக்கிடையில் வடபகுதியில் உள்ள உப்பளங்கள் அனைத்தையும் மீண்டும் இயங்கச் செய்வதற்கான முன் ஏற்பாடுகளை எமது அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்று அந்த அதிகாரிகள் மேலும் கூறினார்களாம். (வி)

## கிரிக்கெட்: இந்தியா தோல்வி

(அடிலெய்ட்)

அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே அடிலெய்ட்டில் நடைபெற்ற 4வது கிரிக்கெட் டெஸ்டில், அவுஸ்திரேலியா பரபரப்பான ஒரு நிலையில் இந்தியாவை 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் வெற்றி பெற 2வது இனிங்ஸில் 371 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் ஆட ஆரம்பித்த இந்திய அணி, ஆட்டம் முடிவடைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன் சகல விக்கெட்டுகளையும் இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விபரம்: அவுஸ்திரேலியா-145, 451; இந்தியா: 225; 333. (வி)

